**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 2/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா**. 31**
**Defence Court**

Name : கந்தசாமி

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **15.06.2022.**

முதல் விசாரணை:

நான் தற்போது தென்காசி அருணாச்சலபுரத்தில் குடியிருந்துவருகிறேன். நான் முன்பு தென்காசி கன்னிமாரத்தெருவில் குடியிருந்துவந்தேன். எங்கள் ஊரை சேர்ந்த வேலுச்சாமி என்பவரை தெரியாது. கறிக்கடை வேலுச்சாமியை தெரியாது. குமார்பாண்டியன் என்பவர் யார் என்றே தெரியாது. கடந்த வாரம் தான் கேள்விப்பட்டேன். சொர்ணத்தேவரை தெரியும். சொர்ணத்தேவர் தென்காசியில்

டீக்கடை வைத்துள்ளார். சுரேஷ், செந்தில், சேகர், சக்திபாண்டியன் என்று யாரையும் எனக்கு தெரியாது. நான் சக்தி பாண்டியன் என்பவரிடம் பேசியதும் இல்லை. 2007 ம் ஆண்டு கொலைகள் நடந்ததாக கேள்விப்பட்டேன். தற்போதுதான் அதை கேள்விப்பட்டேன். 2007 ம் ஆண்டு நடந்த கொலைகள் பற்றி எனக்கு எதுவும் ஞாபகம் இல்லை. எதிரிகளை பற்றி எனக்கு தெரியாது. என்னை போலீசார் விசாரிக்கவில்லை. சம்பவம் பற்றி எதுவும் எனக்கு தெரியாது.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அவ்வாறு விசாரித்தபோது தென்காசி கன்னிமாரன் தெருவில் குடியிருந்துவருகிறேன் என்றும், நான் அப்போது வேலைபார்க்காமல் இருந்துவந்ததால் எங்கள் ஊரை சேர்ந்த வேலுச்சாமி என்பவர் கறி வாங்கிய வகையில் ஹனிபாவின் தாயார் பணம் பாக்கி வைத்திருந்தார் என்றும் அவர் குடியிருந்த வீட்டிற்கு சென்றபோது அவரது வீட்டின் வாசலில் நிறைய காலணிகள் கிடந்தது என்றும் எனவே விருந்தாளிகள் யாராவது வந்திருப்பார்கள் என்று நான் வந்த விபரத்தை மறந்து நின்றுவிட்டேன் என்றும் அப்போது அவரது வீட்டிற்கும் எனக்கு தெரிந்த பலரது குரல்கள் கேட்டது என்றும் அதனால் நான் அங்கிருந்து அமைதியாக அவர்கள் பேசுவதை கேட்டுக்கொண்டிருந்தேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அப்போது ஹனியா எதைபற்றியும் யோசிக்கக்கூடாது என்றும் சொர்ணத்தேவர் மகன்களை கொன்றுவிடவேண்டும் என்றும் செலவு பற்றி யோசிக்க வேண்டாம் என்றும் அப்போது அலாவூதினும் அதைப்போலவே பேசினார் என்றும் நான் இருப்பது தெரிந்து வெளியே வந்த அலாவூதின் என்னை விசாரித்தபோது பணம் வாங்க வந்தேன் என்று கூறினேன் என்றும் எனவே

அலாவூதின் அவரது தாயாரிடம் பணம் கொடுக்க சொன்னார் என்றும் அப்போது திறக்கப்பட்ட வீட்டை நான் பார்க்கும்போது வீட்டில் எனக்கு பரிட்சயமான அப்துல்லா, அன்சாரி, ஆர்.ஐமகன் மேஜிக்சுலைமான், மகன் சம்சுதீன், அசன்கனி, பசீர்முகம்மது, நாகூர்மீரான், காஜாமுகம்மது, மீரான் மைதீன், பஸ்முதீன், சுபகான், என்று அடையாளம் தெரிந்தவர்களும் அடையாளம் தெரியாத சிலரும் அங்கு பேசிக்கொண்டிருநதனர் என்றும் எனக்கு அது அசாதாரணமாக தெரிந்தது என்றும் போலீசாரிடம் கூறினேன் என்றால் சரியல்ல. ஹனிபாவின் தாயார் நாளை நானாக வந்து பணத்தை தந்துவிடுகிறேன் என்று கூறினார் என்றும் நான் இதை கேள்விப்பட்டதும் குமார் பாண்டியனின் சகோதரர் சக்தி பாண்டியனை சந்தித்து தகவல் சொன்னே் என்றும் அப்போது சுரேஷ், மற்றும் செந்தில் இருந்தார்கள் என்றும் அவர்கள் நான் பார்த்துகொள்கிறேன் நீ யாரிடமும் சொல்லவேண்டாம் என்று கூறிவிட்டார்கள் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நினைத்தது போலவே ஹனிபாவீட்டில் பணம் வாங்க சென்றபோது நடந்த அசாதரணமான கூட்டத்தின் தொடர்ச்சியாக நடந்த கொலைகள் என்று தெரிந்துகொண்டேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தென்காசியில் சாரல் டிரைவிங்ஸ்கூல் நடத்துபவரிடம் கம்யூட்டர் ஆப்ரேட்டராக வேலைசெய்கிறேன். எனது உரிமையாளர் பெயர் முத்துகிருஷ்ணன் ஆவார். எங்கள் பள்ளியில் நிறைய இஸ்லாமியர்கள் வாடிக்கையாளராக உள்ளார்கள். தென்காசியில் சுமார் 35 ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் உள்ளது. எனக்கு தென்காசியில் உள்ள சுற்றுவட்டார ஊர்களை பற்றி தெரியும். எனக்கு உடன்பிறந்த சகோதரி உள்ளார். அவரதுகணவர் தென்காசியில் வங்கியில் பணிபுரிந்துவருகிறார். எனக்கு பூர்வீகம் தென்காசியாகும். எனக்கு தென்காசி பிறந்தஊர் என்பதாலும் நான் பணிபுரியும் இடம் என்பதாலும் எதிரிகளை பற்றி நன்கு தெரியும் என்றும் ஆனாலும் வேண்டுமென்றே எதிரிகளை பற்றி

தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2007 ம் ஆண்டு இந்து முஸ்லீம் கலவரம் நடந்ததாகவும் அதன் தொடர்ச்சியாக கொலை சம்பவம் நடந்தது என்றும் கேள்விப்பட்டேன். அந்த சம்பவத்தில் எத்தனை பேர் இறந்தார்கள் என்று எதுவும் எனக்கு தெரியாது. நான் குடியிருக்கும் கன்னிமாரன்கோவில் தெருவில் கிழக்கிலும் மேற்கிலுமாக இஸ்லாமியர்கள் அதிகம் குடியிருக்கிறார்கள். அதனால் இஸ்லாமியர்களை பார்த்து பயந்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.